# என் வகுப்பில் புதுமையான கல்விப் பயிற்சிகள்

## முன்னுரை

கற்பித்தல் என்பது எனக்கு வெறும் வேலை மட்டுமல்ல. தொடர்ந்து ஆர்வம். ஒரு இடைநிலை வகுப்பு ஆசிரியராக நான் எப்போதும் எனது வகுப்பறையில் புதுமை மற்றும் படைப்பாற்றலை கொண்டு வர முயற்சிக்கிறேன். கற்றல் குழந்தைகளுக்கு வேடிக்கையாகவும் ஈடுபாடாகவும் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதனால்தான் எனது வகுப்பறையை கவர்ச்சிகரமானதாகவும் ஊடாடும் வகையிலும் வைத்திருக்கிறேன்.

## ஆசிரியர் மாணவர் இடையிலான உறவு

என் வகுப்பறைக்குள் நுழையும்போது நானே ஒரு குழந்தையாகி விடுகிறேன். என் மாணவர்களின் தேவைகளை புரிந்து கொண்டு அவர்கள் கருத்துக்களை எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் அவர்களுக்கு கற்பிக்க முயற்சிக்கிறேன். என் வகுப்பறை வெறும் படிப்பதற்கான இடம் மட்டுமல்ல. குழந்தைகள் புதிய விஷயங்களை ஆராய்ந்து கற்றுக் கொள்ளும் இடம்.

## அறிவுக்கேற்பக் கல்வி

கற்பித்தல் என்பது வெறும் அறிவைப் பரப்புவது மட்டுமல்ல. குழந்தைகள் கற்றுக்கொண்டு வளரக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதும் என்று நான் நம்புகிறேன். அதைத்தான் என் வகுப்பறையில் என் குழந்தைகளுக்குச் செய்ய முயற்சிக்கிறேன். நான் ஒரு ஆசிரியராகப் பணியாற்றும் வகுப்பில் மாணவர்களின் ஆர்வத்தை தூண்டுவதற்கும், சிந்தனையைக் கிளறுவதற்கும் பல புதுமையான பயிற்சிகளை நடைமுறைப்படுத்துகிறேன். இது மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கிறது.

### 1. செயல்முறை கற்றல் (Activity-Based Learning):

பாடங்களை செயல்கள் மூலமாக கற்பிக்கிறேன். எடுத்துக்காட்டாக, மொழிப்பாடங்களை விளையாட்டுகள், கதைகள், உரையாடல்கள் மூலமாக கற்பிக்கிறேன்.

### 2. குழுக்களாகக் கற்றல் (Group Learning):

மாணவர்கள் குழுக்களாக பிரிந்து இணைந்து செயல்படுகிறார்கள். இது ஒத்துழைப்பு மற்றும் தலைமைக் குணத்தை வளர்க்கிறது.

**3. படைப்பாற்றல் செயல்கள்:**

கட்டுரை எழுதுதல், சிறுகதைகள் உருவாக்குதல், கவிதை பாடுதல் போன்ற படைப்பாற்றல் செயல்களைச் செய்கிறோம்.

**4. ஒருங்கிணைந்த கற்றல் (Integrated Learning):**

தமிழ் பாடங்களை அறிவியல், சமூக அறிவியல், கணிதம் போன்ற பாடங்களுடன் இணைத்துக் கற்பிக்கிறேன்.

**5. கதைக்கூறும் வகுப்புகள்:**

தத்துவமும், நல்லொழுக்கமும் அடங்கிய கதைகளை மாணவர்கள் சொல்ல அனுமதிக்கிறேன். இது அவர்களின் பேச்சுத்திறனை மேம்படுத்துகிறது.

**6. கருத்தரங்கம் மற்றும் விவாதம்:**

மாணவர்களின் மனதினைத் திறக்க வைக்க அவர்களிடம் open talk, debate நடத்துகிறேன்.

## முடிவுரை:

என் வகுப்பில் நடைபெறும் இந்த புதுமையான பயிற்சிகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றன. இது படிப்பை சுவையானதாக மாற்றுகிறது. ஒரே மாதிரியான படிப்பு இல்லாமல், வித்தியாசமான பயிற்சிகள் மூலம் அறிவும், நம்பிக்கையும் வளர்கின்றன. இந்த ஆசிரியர் போல நானும் ஒருநாள் நல்ல ஆசிரியராக வேண்டும் என்று மாணவர்கள் கனவு காண வேண்டும்.